Celebrate Listen Walk (cf Is 2:2-5)
MPC2026

**Published by:**
Peninsular Malaysia
Pastoral Team

**Email:**
api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

## தேர்ந்து தெளிதல்

### செவிமடுத்தலில் இருந்து செயல்

பெரிய குழுவிற்கு திரும்புதல்

ஒவ்வொரு சிறிய குழுவும் தாங்கள் ‘‘நாம்’’ என்ற கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளவும், தூய ஆவியார் எதற்கு அழைத்தார் என்று உணர்வதில் கவனம் செலுத்தவும் அழைத்தல். அதிசவாக, அன்றாட வாழ்க்கையில் ‘எளிய செயலைச் செய்ய’ வேரூன்ற உதவும் ஒரு வார்த்தையை அடையாளம் காணுதல்

எடுத்துக்காட்டு:

- தனிநபர்களாக இளைஞர்களின் குரலுக்கு மிகவும் கவனம் கொடுத்து செவிமடுப்பது மற்றும், அவர்களின் கருத்துகளுக்கு தீவிரமாக கவனம் செலுத்துவது.
- சமூகமாக, இளைஞர்கள் தேர்ந்து தெளிந்து முடிவெடுக்கவும் மற்றும் கட்டாயமான திட்டமிடலில் அவர்களை ஈடுபடுத்துதல்.
- அதிச வாக இளைஞர்களின் நம்பிக்கைப் பயணத்திலும் தூதுரைப்பணியிலும் உடன்பயணம் செய்து ஆதரவு அளித்தல்.

## பரிந்துரை இறைவேண்டல்

வழிநடத்துனர் பங்கேற்பாளர்களை சுருக்கமான இறைவேண்டலைச் செய்ய அழைத்தல்.

எடுத்துக்காட்டு:

.......“ஆண்டவரே, எனக்கு உதவியருளும்.”

பதிலுரை: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

நிறைவாக, ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டல், தமதிரித்துவ புகழ் (தந்தைக்கும் மகனுக்கும் தூய ...) மற்றும் அமைதியை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுங்கள்

## முடிவு பாடல்:

பொருத்தமான ஒரு பாடலைப் பாடலாம் அல்லது இசைக்கலாம்.



ஏப்ரல் 2026

# அதிசசிந்தனை

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்

மாதாந்திர நோக்கம்: **சமூகம் - இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல்**



## தலைமுறைகளுக்கிடையே உறவுகளின் உருமாற்றம்

இளைஞர்கள் திருஅவையின் எதிர்காலம் மட்டுமல்ல; அவர்கள் இன்றைய திருஅவையின் ஒரு பகுதியாகவும் உள்ளனர். இளைஞர்கள் என்பது வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் பதின்மவயதினர் முதல் இளைஞர்கள் வரை ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அனுபவங்கள், பொறுப்புகள் மற்றும் சவால்கள் உள்ளவர்களை உள்ளடக்கியது. இந்தக் காரணத்திற்காக இளைஞர்களுக்கு அதிகாரமளிப்பது சரியானது என்று அணுகமுடியாது.

திருஅவையில் அதிகாரமளிப்பது என்பது பொறுப்பு இல்லாமல் அதிகாரத்தை வழங்குவதையோ அல்லது அவர்களே நிர்வகிக்கவும் விட்டுவிடுவதைக் குறிக்காது. இதன்பொருள் அவர்களின் கண்ணியத்தை அங்கீகரிப்பது, அவர்களின் குரலைக் கேட்பது, தேர்ந்துதெளிவது மற்றும் முடிவெடுப்பதில் அவர்களையும் இணைத்துக்கொள்வது ஆகியவற்றைக் குறிக்கும்.

ஆயர்மாமன்ற திருஅவையில் இளைஞர்களுக்கு அதிகாரமளிப்பது என்பது பகிர்ந்துகொள்ளப்பட்ட தூதுரைப்பணியில் வேரூன்றியுள்ளது. இளைஞர்கள் சக திருத்தூதர்கள் மற்றும் நற்செய்திப் பணியில் இணைபொறுப்புள்ள பங்காளிகள். அவர்களின் திறமைகளுக்கேற்ப மற்றும் வாழ்க்கையில் நிலைகளுக்கேற்ப பங்களிக்க அழைக்கப்படுகிறார்கள். நம்பகத்தன்மையைக் கொடுக்கும்போது, இணைந்துப் பணிசெய்யும் உதவி வழங்கப்படும்போது, பங்கேற்புக்கான இடம் உருவாக்கப்படும்போது, அதிகாரமளிப்பு வளர்கிறது.

இந்த மாதம், நமது சமூகங்கள் எவ்வாறு இளைஞர்கள் தங்கள் நம்பிக்கையை தீவிரமாக வாழவும், கடவுளின் அரசைக் கட்டியெழுப்புவதில் பங்குகொள்ளவும், எவ்வாறு உறுதியளிக்கின்றனர், இணைந்து வருகின்றனர் மற்றும் அதிகாரம் அளிப்பது ஆகியவற்றைப்பற்றி சிந்திக்கலாம்.

# எதிர்கொள்வது

## தொடக்கப்பாடல்

பரிந்துரை: வருவாய் இன்று கிறிஸ்தவ குலமே அல்லது வேறு பொருத்தமான பாடலை தேர்வு செய்யலாம்.

## தொடக்கச் செபம்

அன்பான இறைவா, எல்லா வயதினரையும் உம்மைப் பின்பற்றவும் உமது திருஅவையின் பணியில் பங்குபெறவும் நீர் அழைக்கின்றீர். எங்களின் சமூகத்தில் நீர் தந்த இளைஞர்கள் என்னும் பரிசுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

இளைஞர்கள் தொடர்ந்து நம்பிக்கை, உறுதி மற்றும் பொறுப்புணர்வில் தொடர்ந்து வளர உதவிசெய்வீராக. பரஸ்பர மரியாதையிலும் எதிர்நோக்கிலும் நடந்திட உதவிடுவீராக.

உம்முடைய அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாகவும், தாராள உள்ளத்தோடு பணிசெய்திடவும் ஒரே உடலாகப் பயணிப்போமாக. இவையாவும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## மேய்ப்புப்பணிப் பாதை

இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் அங்கீகாரத்துடன் தொடங்குகிறது. இளைஞர்கள் வெறும் உதவியாளர்கள் அல்லது எதிர்காலத் தலைவர்கள் அல்ல; ஆனால் இப்பொழுது திருஅவையில் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினர்கள். அவர்களின் குரல்கள் இப்போது மிகவும் முக்கியமானது. சமூகத்தின் வாழ்க்கையையும் பணியையும் வடிவமைக்கும் உரையாடல்களில் அவர்கள் இணைக்கப்படும்போது, அவர்களின் அதிகாரமளித்தல் வளர்கிறது.

அதிகாரமளித்தலுக்கு உடன்பணிபுரியும் நபர்களும் தேவை. இளைஞர்களின் வெவ்வெறு நிலைகள் பல்வேறு விதமான ஆதரவைக் கோருகின்றன. பதின்மவயதினர்கள். இளைஞர்கள் மற்றும் பதின்ம வயதை நெருங்குவோர் ஆகியோர் வெவ்வேறு கேள்விகளையும் பொறுப்புகளையும் எதிர்கொள்கின்றனர். அவர்களோடு இணைந்துபயணம் செய்வதென்பது, அவர்களைக் கட்டுப்படுத்தாமல் வழிநடத்துதல், ஆதிக்கம் செலுத்தாமல் ஊக்கப்படுத்துதல், வளர்ச்சி, மற்றும் கற்றலுக்கான இடத்தை அனுமதித்தல் என்பதாகும்.

ஆயர்மாமன்ற திருஅவையில் அதிகாரமளித்தல் எப்போதும் தூதுரைப்பணியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் தங்கள் திறமைகளுக்கேற்ப தூதுரைப்பணி, சேவை மற்றும் சாட்சியவாழ்வு அளிப்பதற்கான பொறுப்பைப் பகிர்ந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள். நம்பகத்தன்மை வழங்கப்பட்டு பங்கெடுப்பு உண்மையானதாக இருக்கும்போது, இளைஞர்கள் கடவுளின் அரசைக் கட்டியெழுப்புவதில் நம்பிக்கையான சீடர்களாகவும், உடன் ஊழியர்களாகவும் வளரமுடியும்.

# இறைவார்த்தை

## 1 தீமோத்தேயு 4: 12

“நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மைஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு”

இன்றைய திருஅவையில் இளை ஞர்களின் நிலையைக் கருத்தில்கொண்டு, இந்த இறைவார்த்தையைப் பற்றி சிந்திக்க சிறிதுநேரம் அமைதியுடன் தியானிப்போம்.

# உரையாடல்

## ஆவியில் கலந்துரையாடல்

ஆவியில் கலந்துரையாட கேள்விகள்.
நமது சமூகத்திலும், தூதுரைப்பணியிலும் இளைஞர்களுக்கு கட்டாயமாக அதிகாரம் அளிக்க தூயஆவியார் எவ்வாறு நம்மை அழைக்கிறார்?

4–6 பேர் கொண்ட குழுவில் கீழ்க்கண்ட மூன்று சுற்றுகளில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பகிர்வுக்குப் பிறகும் ஒரு நிமிடம் அமைதியில் இருப்போம்.

**சுற்று 1** “நான்” என்னும் கண்ணோட்டத்தில் (அமைதியில் தியானிக்க தயாராயிருங்கள். அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் ஒவ்வொருவரும் 2 நிமிடத்திற்கு மேல் பகிரக்கூடாது. மற்றவருடைய பகிர்வையொட்டி எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டாம்)

- உங்களை மிகவும் கவர்ந்தது எது? எது உங்களுக்கு சவாலாக உள்ளது? எது உங்களை ஊக்கப்படுத்தியது?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 2** “நீங்களும் நானும்” என்னும் கண்ணோட்டத்தில்
(இப்போது குழுவில் மற்றவர் பகிர்ந்த கருத்துகளுக்குப் பதில் அளிக்க அழைப்பு – ஒவ்வொருவரும் ஒருமுறை மட்டுமே தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.)

அனைவரின் கருத்துகளையும் செவிமடுத்தபின்:

- உங்களை மிகவும் கவர்ந்தது எது? எது உங்களுக்கு சவாலாக உள்ளது? எது உங்களை ஊக்கப்படுத்தியது?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 3** – ‘நாம்’ என்னும் கண்ணோட்டத்தில்(இப்போது வழிநடத்துனர் அல்லது பொறுப்பாளர் அனைவரும் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து பொதுவான கருத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அனைவரையும் அழைப்பார்)

- அனைவரின் கருத்தையும் செவிமடுத்தபின், தூய ஆவியார் நமக்குக் கூறுவது என்ன?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)